**சபரகமுவ மாகாண சமூக நலன்புரி, சிறுவர் பராமரிப்பு, சிறுவர் பாதுகாப்பு, கிராம அபிவிருத்தி மற்றும் கிராமியக் கைத்தொழில் அமைச்சு**

**சபரகமுவ மாகாண அரச பணியின் சிறுவர் பராமரிப்பு, சிறுவர் பாதுகாப்பு மற்றும் சமூக சேவைகள் திணைக்களத்தின் சிறுவர் அபிவிருத்தி உதவியாளர் தரம் III ற்கு ஆட்சேர்த்தல் - 2024**

**1.0**. 2019/12/30 ஆம் திகதி தொடக்கம் அமுலாகும் வண்ணம் சபரகமுவ மாகாண கௌரவ ஆளுநரினால் அனுமதிக்கப்பட்ட சபரகமுவ மாகாண சிறுவர் பராமரிப்பு, சிறுவர் பாதுகாப்பு மற்றும் சமூக சேவைகள் திணைக்களத்தின் ஆரம்பப்பிரிவு – தொழில்நுட்பமற்ற சேவைப்பிரிவுக்கு (PL1 - 2016) உட்பட்ட சிறுவர் அபிவிருத்தி உதவியாளர் தரம் III பதவிக்கு திறந்த அடிப்படையில் ஆட்சேர்ப்பதற்குத் தகுதிபெற்ற விண்ணப்பதாரர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**2.0** இந்த ஆட்சேர்ப்புக்குரிய கட்டமைப்பு நேர்முகப் பரீட்சை சபரகமுவ மாகாண சமூக நலன்புரி சிறுவர் பராமரிப்பு மற்றும் சிறுவர் பாதுகாப்பு கிராம அபிவிருத்தி மற்றும் கிராமிய கைத்தொழில் அமைச்சின் செயலாளரினால் நடத்தப்படும். கட்டமைப்பு நேர்முகத் தேர்வு நடைபெறும் திகதி விரைவில் அறிவிக்கப்படும். இந்தக் கட்டமைப்பு நேர்முகத் தேர்வு பெறுபேற்றின் படி 1990.03.09ஆம் திகதியிடப்பட்ட அரச பரிபாலன சுற்றறிக்கை 15/90 ல் குறிப்பிடப்பட்ட பிரமாணங்களுக்கு அமைய, கட்டமைப்பு நேர்முகத் தேர்வில் சித்தி பெறுவோர், பெற்ற மொத்த புள்ளிகளிலிருந்து முறையே அதிகூடிய புள்ளிகளிலிருந்து வரிசைக்கிரமத்தின் அடிப்படையில் தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரர்கள் சபரகமுவ மாகாண அரச சேவையின் சிறுவர் அபிவிருத்தி உதவியாளர் தரம் III பதவிக்குத் தெரிவு செய்யப்படுவர்.

**3.0** இந்தக் கட்டமைப்பு நேர்முகத் தேர்வு மூலம் முழுமையாக்கப்படும் **பதவி வெற்றிடங்கள் தொகை 3 ஆகும்.** நியமனம் அமுலாகும் திகதி, நியமன அதிகாரியால் தீர்மானிக்கப்படும். இந்த ஆட்சேர்ப்பு அறிவித்தலின்படி வெற்றிடங்களை நிரப்புவது, நிரப்பாமல் இருப்பது குறித்த இறுதி முடிவு எடுக்கும் அதிகாரம் சபரகமுவ மாகாண சமூக நலன்புரி, சிறுவர் பராமரிப்பு மற்றும் சிறுவர் பாதுகாப்பு, கிராம அபிவிருத்தி மற்றும் கிராமியக் கைத்தொழில் அமைச்சின் செயலாளரையே சாரும்.

**4.0** பதவிக்குரிய சம்பள அளவு இலக்கம் 03/2016 மற்றும் 2016.02.25 எனும் திகதியும் கொண்ட, அரச நிர்வாகச் சுற்றறிக்கையின்படி சிறுவர் அபிவிருத்தி உதவியாளர் தரம் IIIக்கான சம்பளப் பிரிவு PL1-2016 ஆகின்ற அதே வேளை உரிய மாதாந்த சம்பள அளவு
ரூ.24,250/ - 10 X 250 - 10X 270 - 10 X300 - 12 X330 - ரூ.36,410/- ஆகும்.

**5.0 தகைமைகள்**

**சபரகமுவ மாகாண அரச சேவையின் சிறு அபிவிருத்தி உதவியாளர் தரம் III பதவிக்கான ஆட்சேர்ப்புக்குக் கீழ் வரும் தகைமைகள் இருத்தல் வேண்டும்.**

**அ) கல்வித்தகைமைகள்**

க.பொ.த (சா.த) பரீட்சையில் இருதடவைக்கு மேற்படாத வகையில் குறைந்தது இரண்டு திறமை சித்திகளுடன் ஆறு பாடங்களில் சித்தி எய்தி இருத்தல்.

**ஆ) தொழிற்றகைமை**

ஏற்புடையதல்ல.

**இ) அனுபவம்**

அரசில் அல்லது அரைப் பகுதி அரசில் விசேடத் தேவையுடைய சிறார்களைப் பராமரித்தல், அவர்களின் அபிவிருத்திக்காக நிகழ்ச்சிகளைத் திட்டமிட்டு நடைமுறைப்படுத்தியிருத்தல் தொடர்பில் ஆகக் குறைந்தது ஒரு வருடத்திற்குக் குறைவில்லா அனுபவம்.

**ஈ) உடலியல் தகுதிகள்**

ஒவ்வொரு அபேட்சகரும் சபரகமுவ மாகாணத்தினுள் எந்தப் பிரதேசத்திலும் சேவையாற்றவும் பதவியில் கடமையை நிறைவேற்றவும் போதுமான உடல் உள ஆரோக்கியத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

**உ) வேறு தகமைகள்**

I. விண்ணப்பம் கோரும் தினத்தன்று விண்ணப்பதாரர் சபரகமுவ மாகாணத்தில் நிரந்தர வதிவாளராக வேண்டிய அதே வேளை விண்ணப்பம் கோரப்படும் திகதியை அண்மிக்கும் மூன்று வருடங்களில் சபரகமுவ மாகாணத்தில் மூன்று வருடம் வசிக்காவிடில் தனது கணவர் அல்லது மனைவி மூன்று வருடம் வசித்து இருத்தல் வேண்டும்.

II. விண்ணப்பதாரர் இலங்கை பிரஜையாய் இருத்தல் வேண்டும்.

III. விண்ணப்பதாரர் சிறந்த சரிதையை உடையவராகவும் உடல் ஆரோக்கியம் உடையவராகவும் இருத்தல் வேண்டும்.

IV. ஒவ்வொரு விண்ணப்பதாரரும் வர்த்தமானி அறிவித்தலின்படி உரிய தினத்தில் கோரப்படும் அனைத்துத் தகைமைகளையும் கொண்டிருத்தல் வேண்டும்.

**ஊ) வயதெல்லை**

விண்ணப்பம் ஏற்கப்படும் இறுதித் திகதிக்கு 18 வயதிற்கும் 45 வயதிற்கும் உட்பட்டவராக இருத்தல் வேண்டும்.

**6.0 ஆட்சேர்ப்பு முறைமை**

- கட்டமைப்பு நேர்முகத் தேர்வுக்கு உட்படுத்தி பெறப்படும் புள்ளிகளின் ஒழுங்கு முறைகளுக்கு அமைய அதிகூடிய மட்டத்தை உடைய விண்ணப்பதாரர்கள் திறமை அடிப்படையில் நிலவுகின்ற வெற்றிடத்தொகைக்குச் சமனான தொகையினர், அரச நிர்வாகச் சுற்றறிக்கை 15/90 இன் பிரமாணங்களுக்கு அமைய, மாவட்ட ஜனத்தொகை வீதத்தின்படி ஆட்சேர்ப்புச் செய்யப்படுவர்.

**மேற்படி கட்டமைப்பு நேர்முகத் தேர்வில் புள்ளிகள் வழங்கப்படும் விதம் பின்வருமாறு.**

| **புள்ளிகள் வழங்கப்படும் பிரதான களங்கள்** | **புள்ளி** | **அதி கூடிய புள்ளிகள்.** |
|---|---|---|
| 01). மேலதிக கல்வித் தகைமைகள்.<br>I. க.போ.த(உ.த) - அனைத்துப் பாடங்களிலும் சித்தி பெற்றிருத்தல்<br>❖ விசேடசித்தி 15 புள்ளி<br>❖ சாதாரண சித்தி 10 புள்ளி<br>II.டிப்ளோமா. | 15<br>20 | 20 |
| 02) மறைப் பாடசாலை/ அறநெறிப் பாடசாலை இறுதிச் சான்றிதழ் பெற்றிருத்தல். | 10 | 10 |
| 03). தொழில் தகைமைகள்<br>மூன்றாம் நிலை மற்றும் தொழில் ஆணைச் சபை மூலம் அனுமதிக்கப்பட்டுள்ளவாறு NVQ 2,3,4 மட்டச் சான்றிதழ். | 20 | 20 |
| 04) அனுபவம்<br>வருடத்திற்கு 5 புள்ளிகள் வீதம் அதிகூடிய புள்ளிகள் 30 (இரண்டாம் வருடம் தொடக்கம் புள்ளிகள் வழங்கப்படும்) | 30 | 30 |
| 05) விசேட திறன்கள்<br>விளையாட்டு/ தலைமைத்துவம்/ சமூக நலன்புரிப் பணிகள். (ஒரு சான்றிதழுக்கு 2 புள்ளிகள் வீதம் அதிகூடிய புள்ளிகள் 10) | 10 | 10 |
| 06) நேர்முகத் தேர்வில் காண்பிக்கும் திறமைகள். | 10 | 10 |
| | | 100 |

நேர்முகத் தேர்வில் சித்தி பெற ஆகக் குறைந்தது 40 புள்ளிகளாவது பெற்றுக் கொள்ள வேண்டிய அதே வேளை நிலவும் வெற்றிடங்களை நிரப்பும் சந்தர்ப்பத்தில் புள்ளி பெற்ற வரிசைக்கிரமம் கட்டாயமாகக் கடைப்பிடிக்கப்படும்.

**7.0 விண்ணப்பம்**

A4 (21 cm. × 29 cm) அளவிலான கடதாசி ஒன்றின் இரு பக்கங்களையும் பாவித்து,

**(அ)** இலக்கம் 1 தொடக்கம் 4 வரை முதலாம் பக்கத்திலும்,

**(ஆ)** 5 தொடக்கம் ஏனையவைகள் ஏனைய பக்கங்களில் வரும் வண்ணம் தாளின் இரு பக்கங்களையும் உபயோகித்து விண்ணப்பத்தை உருவாக்கிக் கொண்டு, விண்ணப்பதாரர் பரீட்சைக்குத் தோற்ற விரும்பும் மொழியில் தன் கையெழுத்திலேயே விண்ணப்பத்தைத் தயாரித்துப் பூர்த்தி செய்தல் வேண்டும்.

உரிய மாதிரிப் படிவத்தின்படி இல்லாத, குறித்த தினத்துக்கு முன்னதாக பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தாத, தகுதி வாய்ந்த தகைமைகளை மற்றும் கல்வித்தகைமைகளைப் பூர்த்தி செய்யாத, சரியாக விண்ணப்பத்தைப் பூர்த்தி செய்யாத விண்ணப்பங்கள், முழுமை பெறாத விண்ணப்பங்கள், எதுவித முன் அறிவித்தலும் இன்றி நிராகரிக்கப்படும். கொடுக்கப்பட்ட ஆலோசனைக்கமைய பூரணப்படுத்தப்படாத விண்ணப்பங்கள் தொடர்பாக எதுவித பொறுப்பும் கூறப்பட மாட்டாது. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பத்தின் போட்டோ பிரதியொன்றை தன்னிடம் வைத்துக் கொள்வது பிரயோசனமாக அமையும்.

**7.1** இந்த அறிவித்தலில் குறிப்பிட்ட தகைமைகளை உடையவர்கள் மாத்திரம் விண்ணப்பிக்கின்றார்கள் என ஊகித்து, உரிய கட்டணத்தைச் செலுத்தி உரிய தினத்திற்கு அல்லது அதற்கு முன் விண்ணப்பித்துள்ள அனைவருக்கும் நேர்முகத் தேர்விற்குத் தோற்றுவதற்கு, சபரகமுவ மாகாண ,சமூக நலன்புரி, சிறுவர் பராமரிப்பு மற்றும் சிறுவர் பாதுகாப்பு, கிராம அபிவிருத்தி மற்றும் கிராமியக் கைத்தொழில் அமைச்சு அனுமதி தரும். நேர்முகத் தேர்விற்குத் தோற்ற வழங்கப்படும் அனுமதிப்பத்திரம், விண்ணப்பதாரர் இந்தப் பதவிக்குத் தகைமை பெற்றுள்ளார் என ஏற்றுக்கொள்வதாக அமையாது. விண்ணப்பதாரர்கள் நேர்முகத் தேர்வுக்குத் தோற்ற அழைக்கப்பட்டு, ஆட்சேர்க்கப்படும் அறிவித்தலின்படி தகைமைகள் உண்டா என்பதைப் பரீட்சிக்கும் வேளையில், தேவையான தகைமைகள் இல்லை என்பது தெரிய வருமானால் அவர்களின நேர்முகத் தேர்வு அபேட்சகத்தன்மை நிராகரிக்கப்படும். நேர்முகத் தேர்வுக்கு வரும் பொழுது அழைப்புக் கடிதத்தை நேர்முகத் தேர்வுக் குழுவிடம் சமர்ப்பித்தல் அவசியம்.

**7.2** விண்ணப்பத்திலும் பரீட்சைக்கான அனுமதிப் பத்திரத்திலும் விண்ணப்பதாரரின் கையொப்பம் உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும். ஏதாவது ஒரு நிறுவனத்தில் பணி புரியும் விண்ணப்பதாரர், தனது கையொப்பத்தை, அந்த நிறுவனத்தின் பிரதம அதிகாரி அல்லது அவரால் நியமிக்கப்படும் அதிகாரி அவ்வாறில்லாத விண்ணப்பதாரரின் கையொப்பம் அரச பிரதம அதிகாரி, ஓய்வு பெற்ற அரச அதிகாரி, கிராம சேவகர், சமாதான நீதவான், சத்தியப் பிரமாண ஆணையாளர், முப்படை அதிகாரி, அரச/ மாகாண அரச சேவையில் நிரந்தர நிர்வாக சேவை அதிகாரி அல்லது மதகுரு ஒருவரால் உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

**7.3** பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்கள் 2024.08.30 திகதிக்கு அல்லது அதற்கு முன் **செயலாளர், சமூக நலன்புரி, சிறுவர் பராமரிப்பு மற்றும் சிறுவர் பாதுகாப்பு, கிராம அபிவிருத்தி மற்றும் கிராமிய கைத்தொழில் அமைச்சு, சபரகமுவ மாகாண சபை, புதிய நகர், இரத்தினபுரி** என்ற விலாசத்திற்குப் பதிவுத் தபால் மூலம் அனுப்பப்படல் வேண்டும்.

**7.4** கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் **சபரகமுவ மாகாண அரசு சேவையின் அபிவிருத்தி உதவியாளர் IIIஆம் தரப் பதவிக்கு ஆட்சேர்ப்பதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை 2024** என்பதையும் உங்கள் **நிரந்தர பதிவுக்குரிய மாவட்டத்தையும்** குறிப்பிடுங்கள்.

**8.0** விண்ணப்பதாரரின் ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்த, கீழ்வரும் ஆவணங்களில் ஒன்றை நேர்முகத் தேர்வுக் குழுவிடம் சமர்ப்பிக்க வேண்டும்.

i. ஆட்பதிவுத் திணைக்களத்தால் வழங்கப்பட்ட செல்லுபடியான ஆள் அடையாள அட்டை.
ii. செல்லுபடியான வெளிநாட்டுக் கடவுச்சீட்டு .
iii. செல்லுபடியான சாரதி அனுமதிப்பத்திரம்.

**9.0 போலியான தகவல்களுக்கான தண்டனை**

விண்ணப்பங்களைப் பூரணப்படுத்தும் போது மிகுந்த அக்கறையுடன் பூரணப்படுத்த வேண்டும். இப்பரீட்சையின் சட்ட திட்டங்கட்கு அமைய, விண்ணப்பதாரர் ஒருவர், தகுதியற்றவர் என்பது தெரியவருமிடத்து, பரீட்சைக்கு முன் அல்லது பரீட்சையின் போது அல்லது பரீட்சையின் பின் அல்லது எந்தச் சந்தர்ப்பத்திலும் அவரின் விண்ணப்பம் நிராகரிக்கப்படும். விண்ணப்பதாரர்களால் வழங்கப்பட்ட தகவல்கள் பொய்யானது எனத் தெரியவரும் எந்தச் சந்தர்ப்பத்திலும் அவர் அரச சேவையில் இருந்து நீக்கப்படுவார்.

**10.0** இங்கு குறிப்பிடப்படாத ஏதாவது விடயங்கள் இருக்குமாயின் அது பற்றி சபரகமுவ மாகாண, சமூக நலன்புரி, சிறுவர் பராமரிப்பு மற்றும் சிறுவர் பாதுகாப்பு, கிராம அபிவிருத்தி மற்றும் கிராமியக் கைத்தொழில் அமைச்சினது செயலாளரின் தீர்மானம், இறுதித் தீர்மானமாக ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும். அனைத்து விண்ணப்பதாரர்களும் பொதுவான பரீட்சைச் சட்ட திட்டங்களுக்கு அமைவாக நடந்து கொள்ள வேண்டும்.

தினீஷா எஸ்.ரத்நாயக்க,

செயலாளர்,

சபரகமுவ மாகாண சமூக நலன்புரி, சிறுவர் பராமரிப்பு மற்றும் சிறுவர் பாதுகாப்பு, கிராம அபிவிருத்தி மற்றும் கிராமியக் கைத்தொழில் அமைச்சு,

சபரகமுவ மாகாணம்.

2024 ஆடி மாதம் 11 திகதி.

| சபரகமுவ மாகாண அரச சேவை |
|---|

சபரகமுவ மாகாண சிறுவர் பராமரிப்பு மற்றும் சிறுவர் பாதுகாப்பு, சமூக சேவைகள் திணைக்களத்தில் முகாமைத்துவ சிறுவர் அபிவிருத்தி உதவியாளர் தரம் III ற்கான ஆட்சேர்ப்பு – 2024

(காரியாலய உபயோகம்)

விண்ணப்பதாரரின் நிரந்தர வதிவிட மாவட்டம். : கேகாலை - 24

இரத்தினபுரி - 25

(உரிய இலக்கத்தைக் கூட்டில் எழுதவும்.)

**1.0** 1.1 முதல் எழுத்துக்களைப் பின்னால் எழுதி முதல் எழுத்துக்களுடன் பெயர்

……………………………………………………………………………..........

(ஆங்கில கெப்பிட்டல் எழுத்துகளில்) உ-ம் PERERA A.B.C.

1.2 முழு பெயர் (ஆங்கிலக் கெப்பிட்டல் எழுத்துக்களில்)

……………………………………………………………………………..........

……………………………………………………………………………..........

1.3 முழுப்பெயர் (தமிழில் அல்லது சிங்களத்தில்)

……………………………………………………………………………..........

……………………………………………………………………………..........

1.4 தேசிய அடையாள அட்டை | | | | | | | | | | | | | இலக்கம்

**2.0.** 2.1 நிரந்தர முகவரி (ஆங்கிலக் கெப்பிட்டல் எழுத்துக்களில்)

……………………………………………………………………………..........

……………………………………………………………………………..........

2.2. நிரந்தர முகவரி (தமிழில்/ சிங்களத்தில்)

……………………………………………………………………………..........

……………………………………………………………………………..........

2.3 அனுமதிப்பத்திரம் அனுப்ப வேண்டிய முகவரி

……………………………………………………………………………….........

……………………………………………………………………………….........

2.4 விண்ணப்பதாரரின் பிரத்தியேக தொலைபேசி இலக்கம் ☐☐☐☐☐☐☐☐☐☐

**3.0** பால் ஆண் - 0 ☐

பெண் - 1

(உரிய இலக்கத்தைக் கூட்டில் எழுதவும்)

**4.0.** 4.1 பிறந்த தேதி : வருடம் மாதம். திகதி

☐☐☐☐ ☐☐ ☐☐

4.2 .......................... திகதிக்கு வயது :

வருடம் மாதம் நாள்

☐☐ ☐☐ ☐☐

**5.0** வதிவிடத்தை உறுதிப்படுத்தல்

5.1 சபரகமுவ மாகாணத்தில் நிரந்தர வதிவிடம் விண்ணப்பதாரருக்கா அல்லது கணவருக்கா/ மனைவிக்கா என்பது :

……………………………………………………………………...............................................................

5.2. பிரதேச செயலகத்தின் பெயர் : ………………………………….......................................

5.3 சபரகமுவ மாகாணத்தில் வசிக்கும் காலம்………...................முதல்..............................வரை

5.4 கிராம சேவகர் பிரிவு : ………………………….......................

**6.0** கல்வித்தகைமைகள்

6.1. க .பொ. த.(சா.த) பரீட்சை
6.1.1 க .பொ. த.(சா.த.) பரீட்சை பற்றிய விபரம்.

**முதல் அமர்வு**

I. பரீட்சை வருடமும் மாதமும் : ……………………….........
II. பரீட்சைச் சுட்டெண் : ………………………………….....
III.பெறுபேறு :

| பாடம் | தரம் | பாடம் | தரம் |
|---|---|---|---|
| 1. | | 6. | |
| 2. | | 7. | |
| 3. | | 8. | |
| 4. | | 9. | |
| 5. | | 10. | |

**இரண்டாம் அமர்வு**

I. பரீட்சை வருடமும் மாதமும் : ……………………….........
II. பரீட்சைச் சுட்டெண் : ………………………………….....
III.பெறுபேறு :

| பாடம் | தரம் | பாடம் | தரம் |
|---|---|---|---|
| 1. | | 6. | |
| 2. | | 7. | |
| 3. | | 8. | |
| 4. | | 9. | |
| 5. | | 10. | |

6.2. க.பொ.த.(உ.த.) பரீட்சை.
6.2.1. க.பொ.த.(உ.த.) பரீட்சை தொடர்பான விபரம்

I. பரீட்சை வருடமும் மாதமும் : ....................................................

II. பரீட்சைச் சுட்டெண் : ...................................................

III. பெறுபேறு :

| பாடம் | தரம் | பாடம் | தரம் |
|---|---|---|---|
| 1. | | 3. | |
| 2. | | 4. | |

6.3 டிப்ளமோ தொடர்பான விபரம் :

…………………………………………………………………………………..........

…………………………………………………………………………………..........

6.4. தொழிற்றகைமை
6.4.1. மூன்றாம் நிலை மற்றும் தொழில் ஆணைச் சபையினால் அனுமதிக்கப்பட்டுள்ள NVQ 2,3,4 மட்டத்திலான சான்றிதழ் தொடர்பான விபரம்.

I. சான்றிதழ் இலக்கம் : …………………………......................

II. வழங்கிய திகதி : ………………………………......................

III சான்றிதழை வழங்கிய நிறுவனம் : ........................................................................

(போட்டோ பிரதியை முன் வைக்கவும்.)

6.5. அனுபவம் :

………………………………………………………………………………...........

………………………………………………………………………………...........

**7.0** நீங்கள் எப்போதாவது முறைப்பாடு காரணமாக நீதிமன்றத்தினால் குற்றவாளியாக்கப்பட்டுள்ளீர்களா? (உரிய கூட்டில் ”√” அடையாளம் இடுக.) (ஆம் எனின் விவரம் குறிக்

| ஆம் | இல்லை |
|---|---|
| | |

……………………………………………………………………………………...............................

……………………………………………………………………………………...............................

**8.0** விண்ணப்பதாரரின் பிரகடணம்

இங்கு குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் எனது அறிவிக்கும் நம்பிக்கைக்கும் எட்டிய வரை மெய்யானவைகள் என்பதைத் தெரிவிக்கின்றேன். என்னால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள், பூரணம் இல்லாதவை, பொய்யானவை என்று இந்தப் பதவிக்கு நான் தெரிவு செய்யப்படுவதற்கு முன்னர் தெரிய வருமானால் என்னுடைய விண்ணப்பம் நிராகரிக்கப்படும் என்பதை அறிவேன். பின்னர் தெரிய வருமானால் பதவியில் இருந்து நீக்கப்படுவதற்கு உட்பட்டு உள்ளேன் என்பதை அறிவேன். மேலும் நேர்முகத் தேர்வு நடத்தப்படுவது தொடர்பாகச் சமூக நலன்புரி ,சிறுவர் பராமரிப்பு மற்றும் சிறுவர் பாதுகாப்பு, கிராம அபிவிருத்தி மற்றும் கிராமியக் கைத்தொழில் அமைச்சினது செயலாளரின் அல்லது அவரால் அதிகாரம் வழங்கப்பட்ட வேறு நிறுவனத்தின் சட்டதிட்டங்களுக்கும் பெறுபேறு வழங்குவது தொடர்பாக எடுக்கப்படும் தீர்மானங்களுக்கும் நான் கட்டுப்படுவேன் என்பதையும் தெரிவிக்கின்றேன்.

திகதி : ……………………… ……………………………
விண்ணப்பதாரர் ஒப்பம்

**10.0.** விண்ணப்பதாரரின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல்

இந்த விண்ணப்பத்தை முன்வைக்கும் திரு/ திருமதி /செல்வி …………………................. ................................................ என்பவர் எனக்குத் தனிப்பட்ட ரீதியில் தெரியும் என்பதையும் என் முன்னிலையில் ……………………………………………………......... அன்று கையொப்பமிட்டார் என்பதையும் உறுதிப்படுத்துகிறேன்.

திகதி : …………………… ……………………………
உறுதிப்படுத்துபவரின் ஒப்பம்

உறுதிப்படுத்துபவரின் முழுப் பெயர் : ………………………………………………………
பதவி : ………………………………………………..
விலாசம் : ………………………………………….
(பதவி முத்திரை பதிக்கவும்)